நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 (CCIW), மதுரை.
முன்னிலை: திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்எல்பி.,
நீதித்துறை நடுவர் எண்.3, மதுரை.
2020ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 6ஆம் நாள் சனிக்கிழமை
சி.ஆர்.எம்.பி. எண். 1106/2020

. . . . .

சிவகுமார்
த.பெ. முத்து . . . மனுதாரர்/எதிரி

// எதிரிடை //

அரசுக்காக: காவல் ஆய்வாளர்
மதுரை குடிமைப்பொருள் வழங்கல் குற்ற
புலனாய்வு பிரிவு காவல் நிலையம்
குற்ற எண்.56/2020
பிரிவு 6(2)(3)(4)of TNSC(RDCS)order 1982 r/w
7(i)(a)(ii)of EC Act 1955 . . . எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/எதிரி குவிமுச பிரிவு 437-ன்கீழ் பிணை கோரி மீண்டும் மனு தாக்கல் செய்து இன்று என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது, எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. T.தண்டபாணி அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும் இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

1. கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி கடந்த 26.05.2020 முதல் கைது செய்யப்பட்டு மேலூர் சப் ஜெயிலில் இருந்து வருகிறார் என்றும் எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும், இவ்வழக்கில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது. எனவே எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும் இம்மனுவில் மீண்டும் வாதிடப்பட்டது.

2. அரசு தரப்பில் எதிரி அரசு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் புழுங்கல் அரிசியை TN-59-AF-2307 என்ற பதிவு எண் கொண்ட TATA ACE என்ற கூண்டு வாகனத்தில் தலா 50 கிலோ எடை கொண்ட 4 ரேசன் சணல் சாக்குகளில் 200கிலோ ரேசன் அரிசியை ரேசன் கடை விற்பனையாளர்மூலம் ரேசன் கடையிலிருந்து சட்டவிரோதமாக கடத்தி வெளிச்சந்தையில் விற்று அதிக லாபம் சம்பாதித்துள்ளதாகவும் மேலும் கொரோனா வைரஸ் (உயிர்கொல்லி) பரவும் நேரத்தில் ரேசன் அட்டைதாரர்களுக்கு வழங்கக்கூடிய ரேசன் அரிசியை கடத்தி மக்களின் வாழ்வாதரத்தை பாதிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாகவும் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், எதிரி ஜாமீனில் வெளியே சென்றால் தொடர்ந்து

இக்குற்ற செயலில் ஈடுபடுவார் என்பதாலும், இதனால் அரசுக்கு அதிக இழப்பு ஏற்படும் என்பதாலும் எதிரியை ஜாமீனில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

3. இந்நிலையில் குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் தன்மை மற்றும் எதிரி தரப்பில் கூறப்பட்ட கூற்று ஆகியவற்றை கருத்தில் கொண்டும், இவ்வழக்கில் மனுதாரர்/ எதிரி 11 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளதை கருத்தில் கொண்டும், வழக்கு சொத்துக்கள் கைபற்றப்பட்டதை கருத்தில் கொண்டும், மேலும் இவ்வழக்கின் 1வது எதிரி மாண்புமிகு மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற Crl.M.P.No.2692/2020, dated:04.06.2020-ன்படி பிணையில் சென்று விட்டதாலும், இந்த எதிரியை கோவிட்-19 என்ற வைரஸ் தொற்று நோய் கிருமியின் காரணத்தால் இடைக்கால பிணையத்தில், எதிரியை ரூ.10,000/-க்கு அவரது சொந்த பிணையில் விடுவித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேலும் எதிரி நீதிமன்றம் செயல்பட ஆரம்பித்த ஒரு வாரம் காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தனக்காக இரு நபரும் தலா ரூ.10,000/-க்கு தாசில்தார் ஜாமீன் சான்றுடன் பிணைமுறி அளிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் 2020ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 6ஆம் நாள் அவைறிய பகரப்பட்டது.

ஒம்/- எஸ். சந்திர சேகர்

நீதித்துறை நடுவர் எண்.3
(CCIW), மதுரை.